சூழ்நிலை இருக்கிறது. அந்தப் பயிற்சிகளில் ஓட்டப் பயிற்சி, நீளம் தாண்டுதல் போன்றவை மிகவும் கடினமான பணியாக, கடினமான அளவுகோலில் வைக்கப்பட்டிருக்கிறது. அது முன்னர் இருந்த அளவுகோலைவிட மிகவும் கடினமாக இருக்கிறது என்ற கருத்து பரவலாக தமிழகம் எங்கும் பெண் காவலர்கள் தேர்வுக்கு வருகிற கிராமப்புற ஏழைப் பெண்களிடம் இருக்கிறது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் அதற்காக வைக்கப்பட்டிருக்கிற அளவுகோல் சரியாக இருக்கிறதா என்பதை மீண்டும் ஒருமுறை ஆய்வு செய்து அதை உறுதிப்படுத்துவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் up–to–date ஆக இல்லை, செய்தித்தாள்களைப் படிப்பதில்லை என்பது அவருடைய கேள்வியிலிருந்தே தெளிவாகிறது. ஏற்கெனவே பெண் காவலர்களை தேர்ந்தெடுப்பதற்கான விதிமுறைகள் மிகவும் கடினமாக இருப்பதாக புகார் எழுந்து, அந்த விதிமுறைகள் எல்லாம் தளர்த்தப்பட்டுவிட்டன. ஆகவே இப்போது பெண் காவலர்களைத் தேர்வு செய்வதில் எந்தச் சிக்கலும் இல்லை. எளிதாக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 22, திரு. மா. இராஜசேகர், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

22–

காவலர் குடியிருப்பு

***8199–திரு. மா. இராஜசேகர்:**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு சிறப்புக் காவல் படையினருக்குப் புதியதாக மொட்டமலையில் குடியிருப்பு வீடுகள் கட்டிக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா, முதலமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

2001–2002 ஆம் நிதியாண்டில், சென்னை மாநகர காவல் துறை

மற்றும் மாவட்டக் காவல் துறை பணியாளர்களுக்கு, 115.19 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தமிழ்நாடு காவலர் வீட்டுவசதிக் கழகத்தின் மூலம் 3000 குடியிருப்புகளைக் கட்டுவதற்கு, நிர்வாக ஒப்பளிப்பு அளிக்கப்பட்டுள்ளது. அவற்றுள் ராஜபாளையம் மொட்டமலையில் தமிழ்நாடு சிறப்புக் காவல் படையின் 11—வது அணிக்கு கட்டப்படவிருக்கின்ற குடியிருப்புகளும் அடங்கும்.

திரு. மா. இராஜசேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களது தொகுதியில், எங்களது கோரிக்கையை ஏற்று தமிழ்நாடு 11 ஆம் அணி சிறப்புக் காவல் படையினருக்குப் புதியதாக வீடு கட்டிக் கொடுப்பதற்கு உத்தரவிட்ட எங்களது இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என் சார்பிலும், எனது தொகுதி மக்கள் சார்பிலும் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 23, டாக்டர் சி. விஜயபாஸ்கர், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

23–

பெண் காவலர்கள் நியமனம்

***9945–டாக்டர் சி. விஜயபாஸ்கர்:**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காவல் துறையில் க்யூ பிரிவில் பெண் காவலர்கள் மற்றும் அதிகாரிகள் பணியமர்த்தப்படும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா, முதலமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

காவல் துறையில் க்யூ பிரிவில் பெண் காவலர்கள் பணிபுரிகின்றனர். இப்பிரிவில் பணியாற்றுபவர்கள் க்யூ பிரிவு சம்பந்தப்பட்ட தகவல்களை இரகசியமாகச் சேகரிப்பதில் வல்லவர்களாகவும், கடமை உணர்வுடன் செயல்படுபவர்களாகவும் இருக்க வேண்டும். இத்தகைய தகுதியுடைய ஆர்வமுள்ள பெண் காவலர்கள், இப்பிரிவில் சேர விருப்பம் தெரிவித்தால், தேவைக்கேற்ப பெண் காவலர்களும் இந்தப் பிரிவில் நியமிக்கப்படுவார்கள்.